IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

MCOP.No.79/2019 Date: 23.01.2025.

PW1- பூபாலசிங்கம்

சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

விபத்தில் இறந்து போன பாஸ்கரன் என் மகன். அவர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வரும் போது விபத்து ஏற்பட்டது. பேருந்து தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து கிழக்கே திரும்பும் போது விபத்து நடந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் தேசிய நெடுஞ்சாலை செவல்பட்டி சந்திப்பு என்றால் சரிதான். அந்த இடத்தில் கிழக்கில் சாலை பிரியும் இடத்தில் சாலை தடுப்பு உள்ளது என்றால் சரிதான். பேருந்து சரியான பாதையில் தான் கிழக்கு நோக்கி திரும்பியது என்றால் சரிதான். விபத்து தேசிய நெடுஞ்சாலையில் கிழபுற பாதையில் மையப்பகுதியில் நடந்தது என்றால் சரிதான். என் மகன் இடது புற ஓரமாக வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் மகன் சாலையின் மையப்பகுதியில் வந்து விபத்து ஏற்பட்டதால் தான் மாதிரி வரைபடத்தில் சம்பவ இடம் சாலையின் மையத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்திற்கு என் மகன் கவனகுறைவு தான் காரணம் என்றால் சரியல்ல. பேருந்து சரியான பாதையில் தான் வந்தது என்றால் சரியல்ல. என் மகன் கவனமாக வந்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்க முடியும் என்றால் சரியல்ல. விபத்தின் போது என் மகன் இருசக்கர வாகனத்தில் பாரதிராஜா என்பவர் பின்னால் அமர்ந்து பயணம் செய்தார் என்றால் சரிதான். அவருக்கு சாதாரண காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். அவர் எனக்கு உறவினர் இல்லை. அவரை என்னால் சாட்சியாக அழைத்து விசாரிக்க முடியும். விபத்தின் போது என் மகன் வயது 21. என் மகன் SMS கிரசரில் பணிபுரிந்து மாதம் ரூ.20 ஆயிரம் சம்பளம் வாங்கியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. விபத்தின் போது அவர் கல்லூரியில் படித்து வந்தார் என்றால் சரிதான். பகுதி நேரமாக தான் வேலைக்கு சென்றார். எனக்கு 3 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த அவசியமில்லை என்றால் சரியல்ல.

Sd/-பூபாலசிங்கம் Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,

சார்பு நீதிபதி, சங்ககிரி.